சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி]
எலையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்]
வீரச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-4
Part -4

# முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'நவீனத் தமிழாய்விதழ்'** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

| | | | |
|---|---|---|---|
| 152. | க. திலகவதி | மகாகவி பாரதியாரின் சாதி ஒழிப்புச் சிந்தனைகள் | 819-823 |
| 153. | ஏ.வீரப்பன் | சங்க மகளிர் மாண்புகள் | 824-830 |
| 154. | ஆ. அந்துவான் | சங்க இலக்கியங்களில் வாழ்வியல் | 831-833 |
| 155. | ச. குருஞானாம்பிகா | தமிழ் இலக்கியத்தில் பெண் படைப்பாளர்களின், இயங்குதளம் | 834-837 |
| 156. | க. சிவமணி | இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சங்க இலக்கிய உரையாசிரியர்கள் | 838-840 |
| 157. | இரா. மல்லிகா | ஆசாரக்கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள் | 841-845 |
| 158. | ஸ்ரீ. அழகுலெட்சுமி | உறவுகளால் தோன்றும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் | 846-851 |
| 159. | வீ. பூமிநாதன் | சங்க அக இலக்கியத்தில் ஊழ்வலி வாதம் (FATALISAM) | 852-855 |
| 160. | ப. கற்பகராமன் | திருமுருகாற்றுப்படை மற்றும் கந்தரலங்காரத்தில் பெண் வருணனை ஒப்பீடு | 856-858 |
| 161. | ச. கௌசல்யா தேவி | பழந்தமிழர் வாழ்வியல் | 859-865 |
| 162. | செ. திருச்செல்வி | ஆன்மிகத் தேடல்கள் (SPIRITUAL QUESTS) | 866-871 |
| 163. | ஆ. சந்திரசேகரன் | சிவவாக்கியர் காட்டும் கிரியா யோக நெறி | 872-876 |
| 164. | ஆ. இன்பவள்ளி | நாட்டுப்புறப் பண்பாடு தொடர்பான பழக்கவழக்கங்கள் | 877-879 |
| 165. | ரா. ரவிச்சந்திரன் | தமிழ் இலக்கியங்கள் காட்டும் மருத்துவம் சார்ந்த உணவு முறைகள் | 880-882 |
| 166. | கி. பாலமுருகன் | சங்க இலக்கியங்களில் பெண்ணியம் | 883-885 |
| 167. | ஆ.அமுதா & கு. கருமுருகானந்தராஜன் | செம்மொழி இலக்கியங்களில் போர்த் தொழிலாளர் வாழ்வியல் | 886-889 |
| 168. | செ. மகாலிங்கம் | 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை' நாவலில் பூனாச்சியின் இருப்பும் தகர்வும் | 890-893 |
| 169. | பா. வீரகணேஷ் | பெண்ணியம் | 894-899 |
| 170. | க. அருள்முருகன் | திருக்குறளில் அறிவுடைமை | 900-903 |
| 171. | க. ஆறுமுகம் & த.ஜெயக்குமார் | கற்றல், கற்பித்தல் அணுகுமுறை | 904-922 |
| 172. | ம. புவனேஷ்வரி | கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள் | 923-928 |
| 173. | மா. அம்மு & வே. மணிகண்டன் | விழி. பா. இதயவேந்தனின் 'பள்ளத் தெரு' சிறுகதையில் வாழ்வியல் | 929-933 |
| 174. | W. சார்லட் அற்புதமணி | பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்தும் பெண்களின் வாழ்வியல் | 934-940 |
| 175. | த. திவ்யா | கொங்கு வட்டாரத்தில் நடுகற்கள் | 941-945 |
| 176. | அ. இம்மானுவேல் | சூர்யகாந்தன் சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள் | 946-952 |
| 177. | த. கோகுல் குமார் & இரா. மல்லிகா | திருஞானசம்பந்தர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் | 953-958 |
| 178. | ப. ஜெகநாதன்&ந. திலகம் | மகாபாரதத்தில் துரோகம் | 959-966 |
| 179. | அ. கமலசேகர் | கொல்லிமலை மக்களின் இயற்கை அமைப்பும், தொழில்களும் | 967-971 |
| 180. | சா. லிட்டில் பிளவர் & கி. கிறிஸ்டல் சுஜி | குறுந்தொகையில் தமிழர் வாழ்வியல் | 972-978 |
| 181. | இரா. குமரகுருபரன் | கு.சி.பா. - கி.ரா. தமிழ்ச் சிறுகதைகள் வழி 1950களில் உழுகுடி வாழ்வியல் | 979-987 |
| 182. | B. MATHIVANAN & D. JAYAKUMAR | தமிழ் இலக்கியங்களில் "பெண்ணியம்" | 988-994 |
| 183. | ப. மேகலா | ஐம்பெருங்காப்பியங்களில் நிலையாமைச் சிந்தனைகள் | 995-999 |
| 184. | மு. மோகனலட்சுமி | உ..வே.சா அவர்களின் வாழ்வும் பதிப்பு வழிகாட்டிகளும் | 1000-1006 |
| 185. | கு. நந்தினி & மு. பெரியசாமி | கம்பராமாயணத்தில் அனுமனும் அறமும் | 1007-1014 |
| 186. | க. நித்யா | குறுந்தொகையில் தலைமக்களின் இல்லற மாண்பு | 1015-1017 |
| 187. | பி. செல்வராஜ் | சா.கந்தசாமி சிறுகதைகளில் வறுமை | 1018-1021 |
| 188. | ப. பூமணி & அரங்க. லோகாம்பாள் | இனிமையான வாழ்க்கைக்கு இனியவை நாற்பது | 1022-1026 |
| 189. | அ.பிரபா & ந. அய்யப்பன் | சங்க இலக்கியத்தில் காட்டெரிப்பு வேளாண்மை | 1027-1029 |
| 190. | எஸ். பிரேமா | என்.ஸ்ரீராமின் சிறுகதைகளில் சாமானிய மனிதர்கள் | 1030-1034 |
| 191. | க. புஷ்பலதா | ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் முதுபெண்டிர் நிலை | 1035-1038 |
| 192. | மு. சத்யபிரியா | பாவேந்தரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் | 1039-1044 |
| 193. | ஜ. சண்முகப்பிரியா | மருதமலை அலங்காரத்தில் முருகனின் மரபுகள் | 1045-1049 |
| 194. | மா. சிவக்குமார் | தொட்டிய நாயக்கர்களின் வாழ்வியல் சடங்குகளில் பூப்பு சடங்குகள் | 1050-1055 |
| 195. | இரா. சுபாஷினி & வே. மணிகண்டன் | சஞ்சாரம் புதினத்தில் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல் | 1056-1061 |
| 196. | அ. சுமதி & செ. ஜெயந்தி | இருளப்பட்டி நடுகற்களும் அதன் வரலாறும், வழிப்பாடும் | 1062-1066 |
| 197. | த. சுதா & தி. சாந்தி | காற்று மாசுபாடுகளால் ஏற்படும் சுவாசம் தொடர்பான சிக்கல்களுக்கு பிராணாயாமப் பயிற்சிகள் | 1067-1072 |
| 198. | ஆ. திலகவதி | "நீர்ப்பழி" சிறுகதைகள் காட்டும் குழந்தை தொழிலாளர்களின் வாழ்வியல் | 1073-1079 |
| 199. | ப. வருதராஜ்&ந. திலகம் | நாலடியார் உணர்த்தும் இல்லற நெறிகள் | 1080-1086 |
| 200. | க. விஜயா | தமிழ்மொழி மேம்பாட்டிற்கு கலைச்சொல்லின் அவசியம் | 1087-1090 |
| 201. | செ. யசோதா & செ. ஜெயந்தி | கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள் | 1091-1096 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# குறுந்தொகையில் தலைமக்களின் இல்லற மாண்பு

க. நித்யா
தமிழ் உதவிப்பேராசிரியர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

சங்கத் தொகை நூல்கள் - எட்டுத்தொகையில் ஒன்று குறுந்தொகை. இது 'நல்ல' என்ற அடைமொழி பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இந்நூல் தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடிக்கும் பெட்டகமாக விளங்குகிறது.

சங்க அக இலக்கியங்கள் தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்வின் சிறப்பம்சங்களைச் சுட்டுகின்றன. இதில் தலைமக்கள் தமது இல்வாழ்வில் சிறந்த நெறிகளைக் கடைபிடித்து வளத்தோடு வாழ்ந்ததை அறியலாம். அவ்வகையில் இருவரும் இல்வாழ்வு மேற்கொண்டு சிறப்பாக இல்லறத்தைச் செயல்படுத்திய நெறிகளை ஆய்வதே இக்கட்டுரை ஆகும்.

இத்தகைய இல்லறத்தில் கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும் வாழ்ந்தும் புரிந்தும் ஏற்றுக் கொண்டும், விட்டுக்கொடுத்தும், குழந்தைகள் பெற்றும் விருந்தாற்றியும், தொண்டு செய்தும் வாழ்ந்து அறம் ஓம்பி இல்வாழ்வினை நடத்துதலே சிறந்த இல்லறமாகும்.

## இல்லற மாண்பு

சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வளர்த்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. தலைவனோடு கூடி நிகழ்த்தும் இல்லற வாழ்க்கை வீடுபேறுலக வாழ்வைவிடச் சிறந்தது என்பதை,

"கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறி அருந்து
குரங்கு ஒருங்கிருக்கும் பெருங்கல் நாடன்
இனியன் ஆகலின், இனத்தின் இயன்ற
இன்னா மையினும், இனிதோ
இனிதுஎனப் படூஉம் புத்தேன் நாடே?'[1]

என்ற பாடலின் வழி அறிய முடிகின்றது.

தேவர் உலகம், துன்பமில்லாது இன்பமே உடையதாக விளங்கும். ஆனால் தலைவனோடு கூடி வாழும் வாழ்க்கை இன்பமும் துன்பமும் உடையதாக விளங்குகின்றது. இன்பத்தில் மட்டுமின்றித் துன்பத்திலும் பங்கேற்பதாக அமைவதால் இல்லற வாழ்க்கை வீடு பேற்றுலக வாழ்க்கையைவிட இன்பமுடையது எனத் தலைவி கூறுவதை இப்பாடலின் வழி அறியமுடிகின்றது.

## தலைவியின் குணச்சிறப்பு

தலைமக்களின் இல்லறத்தில் சிற்சில தவறுகள் நேரிடுவது வழக்கம். அத்தவற்றை மற்றவருக்கு வெளிப்படுத்திய ஊடலை மேலும் வளர்க்காது குடும்பத்தின் நல்லுறவுக்காகவும், அமைதிக்காகவும் மறைத்து விடுதலும் உண்டு. குறுந்தொகைத் தலைவி தன் கணவன் தன்னைப் பேணாமல் பரத்தையரைப் போற்றும் கொடுமையை மற்றவருக்குப் புலப்படுத்தாமல் மன்னிக்கும் மனப்பக்குவத்தோடு அமைதி காத்தாள் என்பதனை,

"தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே"[2]

என்ற வரிகள் சுட்டுகின்றன. தகுதி வாய்ந்த இல்லத் தலைவியையுடைய இல்லமே நல்லில்லமாக அமைதல் கூடும் என வள்ளுவர் கருதினார். ஒருவனின் மனைவியிடத்து மனைகேற்ற மாட்சி, இல்லறத்தை நன்கு நடத்தும் இயல்பு இல்லாவிடின் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய பிற பல நலன்களைப் பெற்றிருப்பினும் பயனற்றது. மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில் ஒன்றும்

இல்லாவிடினும் யாதும் உள்ளது போலாகுமென்றும் அவள் சிறந்தவளாக வாய்க்காவிடில் பிற வளங்களனைத்தும் இருப்பினும் யாதுமில்லாதது போலாம் என்று கூறுகிறார்.

"மனையாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"[3]

### தலைவனின் குணச்சிறப்பு

திருமண வாழ்க்கையின் பின் கூடி வாழ்க்கை செய்த தலைவன் தலைவியைக் காணும் பொருட்டு செவிலித்தாய், தலைவன், தலைவி மனைக்குச் சென்று அவள் கண்ட காட்சியை நற்றாய்க்கு பின்வருமாறு கூறுகிறாள்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுஉறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உன்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
'இனிது' எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே!"[4]

புதிதாக திருமணம் செய்த தலைவி தனது கணவனுக்கு தன் கையினாலேயே சமைத்துப் பரிமாற எண்ணி சமையலில் முன் அனுபவத்தினையும் கருத்திற் கொள்ளாது முனைகிறாள். அதன் பொருட்டு தயிர்க்குழம்பினை தயார் செய்கிறாள். முற்றிய தயிர் கட்டியைக் கையால் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பினைத் தாளிக்கும் போது அடுப்பிலிருந்து வந்த புகையானது அவளது குவளை மலரைப் போன்ற மை பொருந்திய கண்களைக் கலங்கச் செய்தது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தான் துழாவிச் செய்த இனிய குழ்பினை தன் கணவனுக்கு உண்ணக் கொடுக்கிறாள். கணவனோ அக்குழம்பினை 'இனிது' எனப் பாராட்டியபடி உண்கிறான். இதனால் ஒளி பொருந்திய நுதலை உடைய தலைவியின் முகம் சந்தோச ஒளி பூணுகிறது. இவ்விதம் மனைவியரை ஆற்றுவிக்கும் தலைவர்களையும் குறுந்தொகைப் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றன.

### இல்லற வாழ்க்கை

வள்ளுவர் திருக்குறளில் இல்லறவியல் எனும் பகுதியில் வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களாக வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறன் மனை நோக்காமை, ஈகை மற்றும் புகழ் முதலான விடயங்களை எடுத்துக் கூறுகின்றார்.

கணவன் மனைவி என்பார் என்றும் பிரியாத பேருறவு கொண்டு வாழ்ந்து சிறக்க வேண்டும் என்பதனை,

"....இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகிர் என் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு
நேர்பவளே"[5]

என்ற குறுந்தொகை பாடல் கூறுகிறது.

தலைவனை நம்பி வந்த தலைவியரை காத்தொழுகுவதும், தலைவி செய்வதுமே தலைவரின் உண்மையான வீரமென,

"பொங்கு திரைப் பொருத வார்
மணல் அடைகரைப் புண்கால் நாவல்"[6]

தோழியொருத்தி புதுமணத் தம்பதியனரை வாழ்த்தி வரச் சென்றாள். அங்ஙனம் வாழ்த்திய தோழி தலைவனை விளித்து, களவுக் காலத்திலே தலைவியுடன் உரிமை கொண்டு தமருடன் பகையும் கொண்டு இறுதியில் தலைவியை கைக் கொண்டாய். அதற்கு காரணம் களவுக் காலத்திலே நீ அவள் மீது கொண்ட அளப்பரிய அன்பேயாகும் இதுவரை அவ்வன்பு குறையவில்லை எனினும் உன் சிறு பிரிவையும் தலைவி தாங்கள் எனக்கூறி இன்னும் நெருக்கமாக அன்பு செய்வாயாக என வாழ்த்துரைக்கிறாள்.

## குடும்பத்தின் பயன்

இவ்வளவு பெருமை பெற்ற குடும்ப வாழ்விற்கு பயன் என்ன என்ற கேள்விக்கு விடை மக்கட்பேறாகும்.

"படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வராயினு மிடைபட
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குரை யில்லைத் தாம் வாழுநாளே"[7]

குறுகக் குறுக நடந்து சிறிய கையினை நீட்டி, உணவுக் கலத்தில் கிடந்ததைத் தரையிலே இட்டும் கீழே கொட்டியும், தோண்டியும் வாயிற் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யுடைச் சோற்றை உடம்பில் சிதறியும் என பல விதங்களில் உணவினை உண்ணும் மக்களைப் பெறாதவரின் வாழ்கை பயனில்லாத வாழ்க்கை என புறநானூறு பேசுகிறது.

குடும்பத்தின் பயன் என வருகிறபோது, மக்கட்பேறு தான் அதில் முதலிடம் வகிக்கின்றது. தாய் மகனைப் பெறலும், தந்தை சான்றோனாக அம்மகனை ஆக்கலும் கடனாகக் கொண்டு சங்கத் தமிழர் வாழ்ந்திருக்கின்றனர்.

"ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"[8]

புதல்வன் உறங்குவதை அறிந்த தலைவன் அங்குச் சென்று தானும் புதல்வனை அணைத்த வண்ணம் அழகிய கட்டிலில் படுத்திருந்தான். அந்நிலையில் தலைவி புதல்வனோடு தலைவனையும் சேர்த்து புறம் தழுவியபடியே மகிழ்ந்துறங்கினாள். இதனை,

"புதல்வற் றழீ இயினன் வறலவன்
புதல்வன் தாயவன் புறங்கவைஇ யினளே"[9]

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

இருவரின் பின்விளைவாகிய புதல்வன் நடுவே படுத்துறங்கியதையும் தலைமக்களின் அன்பும் பிணைப்பும் கண்ட தோழி இதுவன்றோ இல்லறச் சிறப்பென்று வியந்து பாணனிடம் கூறுகிறாள்.

## முடிவுரை

தலைவன் தலைவியின் உறவு, உடம்போடு இயைந்த உயிர் போன்றது என்பது புலனாகிறது. தலைவன் தவறுகள் செய்தவிடத்தும் அதை பொறுத்து மன்னித்து ஏற்றுக் கொள்ளுதலே சிறந்த இல்லொழுக்கமாகக் குறுந்தொகை பாடல்களில் சுட்டப்படுகிறது.

## சான்றெண் விளக்கம்

1. புலியூர்க்கேசிகன்(உ.ஆ) குறுந்தொகை பா.எண்.288
2. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), குறுந்தொகை பா.எண்.9
3. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), திருக்குறள் - குறள்.52
4. புலியூர்க்கேசிகன்(உ.ஆ)குறுந்தொகை பா.எண்.167
5. புலியூர்க்கேசிகன்(உ.ஆ),குறுந்தொகை பா.எண்.49
6. புலியூர்க்கேசிகன்(உ.ஆ),நற்றிணை பா.எண்.35
7. புலியூர்க்கேசிகன்(உ.ஆ),புறநானூறு பா.எண்.188
8. புலியூர்க்கேசிகன்(உ.ஆ),புறநானூறு பா.எண்.312
9. புலியூர்க்கேசிகன்(உ.ஆ),குறுந்தொகை பா.எண்.359

ஃ